மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதாரம் இப்பொழுது இருக்கிறதா? கேள்வி நேரத்தில் குற்றங்குறை சாட்டுதல் கூடாது.

திரு. க. இராமமூர்த்தி: கேள்வியே, டெண்டர் மூலம் இல்லாமல் நாமினேஷன் மூலம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைக்கேளுங்கள்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, இந்தக் கூவம் சீரமைப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அதற்கான வேலைகள் காண்டிராக்டர்களுக்கு டெண்டர்கள் மூலம் விடாமல், தனிப்பட்டவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலே நாமினேஷன் மூலம் விடப்படுவது உண்மையா? அதன் விளைவாக பல்வேறு விரும்பத்தகாத நிலைமைகள் ஏற்பட்டிருப்பது உண்மையா? இதைப்பற்றி அரசாங்கம் விசாரணை செய்ய முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு, மூன்று கேள்விகள் போட்டால், முதல் கேள்விக்கு உண்மை என்று விடை சொன்னால் தான் அடுத்த கேள்வியைக் கேட்டால் அதற்கு விடை சொல்ல வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பொதுப்பணித் துறை குறிப்பிட்ட விதிமுறைகளின்படி வேலை செய்து வருகிறது. விதிமுறைகளுக்கு உட்பட்டு, டெண்டர்கள் கோரவும், நாமினேஷன் கேட்கவும் அதிகாரமிருக்கிறது. அந்த அதிகாரத்திற்கு உட்பட்டு செயல்பட்டு வருகிறது. எந்தவிதமான குறைபாடுகளும் ஏற்பட்டதாகக் கருத்துக்கள் கிடையாது. வீணாகப் புகார்களைச் சொல்லி வேலைக்குத் தயக்கம் ஏற்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பரங்கிப்பேட்டைத் துறைமுகம்

*506 வினா—திரு. எஸ். சிவசுப்ரமணியன்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரங்கிப்பேட்டையை ஒரு துறைமுகமாக்குவதற்கு இம்மாநில அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஏற்கனவே பரங்கிப் பேட்டையில் ஓர் துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது. இத்துறை முகத்தில் பல ஆண்டுகளாக யாதொரு வணிகப் போக்குவரத்தும் இல்லாததால், இதை மூடுவதற்கு தமிழக அரசின் ஒப்புதலை மத்திய அரசின் சுங்க இலாகா கோரியது. தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், தமிழக அரசின் துறைமுக அதிகாரியிடமும் கருத்துக்களை கேட்டு அறிந்த பின்னர், இந்த அரசு ஒப்புதலை அளித்துள்ளது.

1970 மார்ச் 23]

திரு. எஸ். சிவசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, பரங்கிப் பேட்டைக்கு போர்டோநோவோ என்ற பெயர் இருக்கிறது. ஆங்கிலேயர் காலத்தில் அது துறைமுகமாக இருந்து, பல கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பல கட்டிடங்கள் இருக்கின்றன. சிங்கப்பூர், பினங்கு, கோலாலம்பூர் ஆகிய இடங்களிலிருந்து வரும் ஜனங்கள் நாகப்பட்டினத்தில் இறங்கவேண்டியிருக்கிறது. அப்படி அங்கு இறங்க முடியவில்லை என்றால், திரும்பவும் சென்னைக்கு வந்து போகவேண்டியிருக்கிறது. ஆகவே, பரங்கிப்பேட்டை துறைமுகத்தை அமைத்தால், நிச்சயம் எல்லா மக்களுக்கும் சௌகரியமாக இருக்கும், பல விரயங்கள் ஆகா. ஆகவே, திரும்பவும் நம்முடைய அரசு பரிசீலனை செய்து, மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: போதிய வணிகப் போக்குவரத்து இல்லாத காரணத்தினால், இந்தத் துறைமுகத்தை மூடுவதற்கான அந்த யோசனை, ஆராயப்பட்டது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, மீண்டும் போதிய போக்குவரத்து உண்டாவதற்கு சாத்தியக்கூறுகள் தென்படுமானல், அது அந்த நேரத்தில் ஆராயப்படும்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister the number of ports recommended by the State Government to the Central Government. Is there any order of priority fixed for the same?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, at the moment we are engaged in improving the facilities at the Cuddalore Port. As the hon. Member is aware, the Tuticorin Port is also being developed as a major port. Apart from these, there are minor improvements being made to the various other ports.

செங்கீரைக் காட்டில் கிடைக்கும் காவிக்கல்

*507 வினு—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் வட்டத்திலுள்ள செங்கீரைக் காட்டுப் பகுதியில் விளையும் காவிக் கல்லைக் குத்தகைக்கு விடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன்:

(அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. மு. ச. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் வட்டத்திலுள்ள செங்கீரைக் காட்டுப் பகுதியில் கிடைக்கும் ரெட்டாக்சர் வெளிநாடு ஏற்றுமதிக்கு அதிக கிராக்கி இருக்கிற